பக்கங்கள்: பத்து

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 17 | சனிக்கிழமை | (31-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 43

துரித தபால் பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

## சர்வதேச நாடுகள்

# தமிழ்மக்களுக்கான உதவிகளை நேரடியாகச் செய்ய வேண்டும்

## நோர்வே அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

(ஒஸ்லோ)

**தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் பேசும் மக்களுக்குரிய பொருத்தமான தீர்வொன்றைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தையை இலங்கை அரசுடன் நடத்துவதற்குரிய நிலையிலேயே உள்ளார்கள் என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜ[யத்]தை மேற்கொண்டு நோர்வே [செ]ன்றுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன் [த]லைமையிலான குழுவினர் நோர்வே[யி]ன் வெளியுறவுத்துறை அமைச்[ச]ர் ஜோன் பீற்றர்சன் தலைமையி[லா]ன குழுவினருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியபோதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நோர்வே சென்றுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் தலைமையிலான குழுவினரை நேற்று முன்தினம் நோர்வே நேரப்படி பிற்பகல் 2மணிக்கு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நோர்வே வெளியுறவு அமைச்சின் அலுவலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பு சுமார் 3 மணி நேரம் வரை நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)



ஒஸ்லோவில் விடார் ஹெல்கீசன் சு.ப.தமிழ்ச்செல்வனைக் கைலாகு

## டொன்பியுறு ஹெவ்டே நாளை பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைவராக மேஜர் ஜெனரல் டொன்பியுறு ஹெவ்டே நாளை பதவி ஏற்கவுள்ளார்.

இப்பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு டொன்பியுறுஹெவ்டே இன்று நோர்வேயில் இருந்து புறப்பட்டு கொழும் வரவுள்ளார் என்று இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்தபின் 2002 மார்ச் மாதம் முதல் 2003 மார்ச் மாதம் வரை கண்காணிப்புக்குழுத் தலைவராக பதவி வகித்து வந்தவர்

## மன்னார் காட்டுப் பகுதியில் 3 ஆண்களின் சடலங்கள் மீட்பு

(வவுனியா)

மன்னார் நானாட்டானுக்கு அருகிலுள்ள விலாச்சி காட்டுப்பகுதியில் இருந்து மூன்று ஆண்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

அனுராதபுரம்-மன்னார் எல்லைப் பகுதியிலுள்ள சிங்களக் கிராமமான மேற்படி காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக மீட் கப்பட்டவர்களில் இருவர் இளைஞர்களாவர்.

மேற்படி சடலங்களில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் சில தினங்களுக்கு முன்னர் அவர்கள் கொலை செய்யப்பட்டு காட்டுப்பகுதியில் வீசப்பட்டிருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது.

பொலிஸாரால் நேற்றுக்காலை மீட்கப்பட்ட சடலங்கள் மூன்றும் அடையாளம் காணும் பொருட்டும் பிரேத பரிசோதனைக்காகவும் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

(த-13)

## கூட்டணி மத்திய குழு நாளை சங்கரி தலைமையில் கூடுகிறது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு நாளை ஞாயிற்றுக கிழமை கொழும்பில் கூடுகிறது.

கட்சித்தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

இதேவேளை கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரியைப் பதவியில் இருந்து நீக்கும் பொருட்டு அதன் மத்திய குழுவை கட்சியின் செயலாளர் இரா.சம்பந்தன் கூட்டுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக ஆனந்தசங்கரி நீதிமன்றில் ஏற்கனவே மனுத்தாக்கல் செய்திருந்தார். இம்மனு

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை ஊழியர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் திங்கட்கிழமை முதல் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர்ச்சி

மேற்படி ஊழியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 15 அம்சக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கென பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு



ஒஸ்லோவில் விடார் ஹெல்கீசன் சு.ப.தமிழ்ச்செல்வனைக் கைலாகு கொடுத்து வரவேற்கும் காட்சி

படிக்கையை செய்தபின் 2002 மார்ச் மாதம் முதல் 2003 மார்ச் மாதம் வரை கண்காணிப்புக்குழுத் தலைவராக பதவி வகித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

முன்வைக்கப்பட்ட 15 அம்சக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கென பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு வழங்கப்பட்ட காலக்கெடு கடந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் படைத் தளபதி மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

முன்னாள் விமானப்படைத் தளபதி ருக்மன் ஹேரத் நேற்று முன்தினம் அவரது கிருலப்பனையிலுள்ள வீட்டில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி தாரிகளால் சுடப்பட்டுள்ளார்.

துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் வந்து 3 தடவைகள் ரி-56 ரக துப்பாக்கியால் சுட்டு விட்டு அவ்விடத்தை விட்டுத் தப்பி ஓடியுள்ளனர். இவர்களைத் தற்போது பொலிஸார் தேடிவருகின்றனர்.

முன்னாள் விமானப்படைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி கூட்டு ஜனாதிபதியின் ஆசியுடன் நடக்கவில்லை

## ஜனாதிபதியின் சகோதரி சுனேத்திரா

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டணியை ஆதரிப்பவர்களை ஜனாதிபதியின் சகோதரியான சுனேத்திரா பண்டாரநாயக்க கடுமையாகச் சாடியுள்ளார். இராஜதந்திரிகளை வரவேற்கும் நிகழ்ச்சியொன்றில் பேசும்போது இக்கூட்டணிக்குப் பிரதான தரகர்போல செயற்பட்ட நிமால் ஸ்ரீபால டி.சில்வாவை அவர் குற்றஞ்சாட்டினார்.

இதற்கு உதாரணமாகக் கிராமக் கதையொன்றைக் கூறிய அவர், திருமணத்தரகர்கள் முதலில் தாக்கப்படுவதே கிராமங்களில் வழக்கம். இதேபோன்றதொரு நிலையே நிமால் ஸ்ரீபால டி.சில்வாவிற்கு ஏற்படப்போகிறது. ஜே.வி.பியுடனான திருமணத்திற்கு நிமால் ஸ்ரீபால டி.சில்வா, மங்களசமரவீர மற்றும் தனது சகோதரர் அனுரா பண்டாரநாயக்க ஆகியோரே தரகர்கள்.' இக்கூட்டுத் தொடர்ந்து நீடிக்காது. இம்முயற்சி தனது சகோதரி சந்திரிகாவின் முழுஆசியுடன் நடைபெற்றிருக்கவில்லை.கூட்டணி அமைக்க முன்னர் அது நாட்டிற்கு நல்லதா? மக்களுக்கு, கட்சிக்கு நல்லதா? என யோசித்திருக்க வேண்டும். ஆனால் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. பதவியைக் கைப்பற்றுவதே பிரதான நோக்கம். இவ்வாறு சுனேத்திரா பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் பவ்ரல் அமைப்பைச் சேர்ந்த பாக்கியசோதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு,தென்மராட்சி பி.செயலகங்கள் முன்பாக

# இலங்கையின் சுதந்திர தினத்தன்று இடம்பெயர்ந்த மக்கள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் ஒன்றிணைந்து தமது உண்மை நிலையை உலகத்துக்கு எடுத்தியம்பும் வகையில் இலங்கையின் சுதந்திர தினமான எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை வலி வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

யாழ் மாவட்ட நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ். கணேசன் இதுபற்றி விளக்கமளிக்கையில்,

வலி வடக்கிலிருந்து போர் காரணமாக இடம்பெயர்ந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 222 பேர் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்கின்றன. போர் ஓய்ந்துள்ள தற்போதைய சூழ்நிலையிலும் இந்த மக்களால் சொந்த இடத்தில் வாழமுடியாதுள்ளது.

தற்காலிகமாகவேனும் எமக்கு வீடுகளை அமைத்துத்தரவோ எமது நலன்கள் பற்றிச் சிந்திக்கவோ யாரும் இல்லை.

அரசியில்வாதிகளுக்கோ சமூக ஆர்வலர்கள் என்று தம்மைத்தாமே கௌரவப்படுத்திக் கொள்கின்றவர்களுக்கோ, அன்றி

(10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### இனவாதம் பேசிக் காலத்தைக் கடத்திய

# ஜே.வி.பியின் சமாதானச் சாயம் இன்னும் சில காலத்தில் வெளுக்கும்

## புளொட் தலைவர் சித்தார்த்தன் விளக்கம்

(கொழும்பு)

**ஜே.வி.பியினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும்விடயத்தில் ஒருபோதும் ஒத்துழைக்க மாட்டார்கள். பேச்சளவிலேயே அவர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இணங்கியுள்ளார்கள் என்பதை தமிழ்க்கட்சிகள் நன்கு உணர்ந்துள்ளன.**

**ஆயினும் இனவாதம் பேசி வந்த ஜே.வி.பியினர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தற்போது கவனம் செலுத்திருக்கின்றமையை சாதகமாகப் பயன்படுத்தி சமாதான நடவடிக்கைதளை அரசு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும். என்பதற்காக ஜே.வி. பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டிணைவை எதிர்க்காது தமிழ்க்கட்சிகள் மௌனம் சாதிக்கின்றன என புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனததினால் நடாத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே சித்தார்த்தன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஜே.வி.பி.யினர் ஈடுபட்டுவநதமையை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம். தற்போது தமிழ் மக்களை ஆதரிக்கும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர்களே முன்வந்திருக்கின்றார்கள். சில உறுதி மொழிகளை வழங்கி வருகின்றார்கள்.

ஆட்சிப் பீடம் ஏறும் வரைதான் அவர்களின் உறுதிமொழி காப்பாற்றப்படும். ஆட்சியில் வந்ததும் மீண்டும் சமாதானத்திற்கு எதிராகவே செயற்படுவார்கள் என்பதையும் நாங்கள் நன்கு அறிவோம்.

ஜே.வி.பியினரின் தற்போதைய நிலைபபாட்டை சாதகமாகப் பயன்படுத்திப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும்.

இனபபிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணும் வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரமபிக்க வேண்டும். என்பதற்காக நாம ஜே.வி.பி. -ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியின் கூட்டிணைவை எதிர்க்காதிருக்கின்றோம். அது இந் நிலைப்பாட்டைச் சிலர் ஜே.வி.பியுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு துரோகம் இழைப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

எமது மக்களுக்கு நாம் துரோகம் இழைப்பதால் எமக்கு எந்த வித லாபமும் இல்லை. யார் யாரோடு கூட்டுச் சேர்ந்தாலும் எமது மக்களின் பிரச்சினை தீர்க்கபபடவேண்டும். எமது மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இவ்வாறு ஜே.வி.பி.-ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டிணைவுக்கு நாம் தற்போது எதிர்ப்புக் காட்டினால அவர்கள் சமாதான நடவடிக்கைகளை மீண்டும் எதிர்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

இதற்கிடையில் அரசினால் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட 2004ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் நான் கலந்து கொள்ளாதிருந்தமை குறித்தும் பலர் மத்தியிலும் சந்தேகம் எழுந்துள்ளன.

இந்நிதி ஒதுககீட்டினால் வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் எவ்வித நனமையும் அனுபவிக்கமாட்டார்கள என்பதனாலேயே நான் பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பு நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு உள்ளடங்கிய வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப் பில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பில் கலந்துகொண்டு வாக் களித்து விட்டு பின்னர் பாதுகாப்பு அமைச்சுககான நிதி ஒதுக்கீடுபற்றிய குழுநிலை விவாதத்தை எதிர்த்துள்ளது. இது அவர்கள் மக்களை ஏமாற்றுவதற்காகப் போட்ட நாடகம என்றே நான் கருதுகிறேன்.

நாம் அப்படி மக்களை ஏமாற்றவில்லை. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்நிலையில் நாம் அதற்கான நிதி ஒதுக்கீட்டை எதிர்த்தால் சமாதானமே கேள்விக்கூறியாகிவிடும்.

இது ஒருபுறம் இருக்க தமது வீட்டிற்குள்ளே பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளமுடியாத அமை[illegible]சர் சந்திரசேகரன் அடுத்தவீ[illegible] பிரச்சினைக்குள் தலையிடு[illegible]றார்.

அதாவது மலையக மக்களி[illegible] பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள[illegible] முடியாதவர் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினை[illegible]களைத் தீர்க்க முனவருவது எ[illegible]பது வேடிககையாகவே இரு[illegible]கின்றது.

இவைதவிர வடக்கு-கிழக்[illegible] வாழ் மக்களின் பிரச்சினைக[illegible] வேறு, மலையக மககளின் பி[illegible]சினைகள் வேறு இதனை அ[illegible] சர் ஆறுமுகம் தொண்டமான் [illegible] எடுத்துக் கூறியிருக்கின்றார்.

இந்நிலையில் வடக்கு-கிழ[illegible] உள்ள சகல தமிழ்க்கட்சிக[illegible] மலையகக் கட்சிகளுடன் கூ[illegible]ணைவது சாத்தியப்படாத விட[illegible] என்பதை அமைச்சர் சந்திரசே[illegible]னுக்குக் கூறிவைக்க விரும்புகின்[illegible]

அத்துடன் தேர்தலுக்கா[illegible] கட்சிகள் கூட்டுச் சேருவதைவி[illegible] இனபபிரச்சினைக்குத் தீர்வுகாணு[illegible] வகையில் சகல கட்சிகளும் ஒன்றிணைநது செயற்படுவது என்றால் அதனை நாம் ஏற்றுக்கொள்வோம்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டிமுறையிலான தீர்வு தவிர்ந்த எந்தவொரு தீர்வையும் தமிழ்க்கட்சிகள் ஏற்கமாட்டாது. என்பதையும் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன் என்றார். (உ-60,10)

## கோப்பாய்க் கோட்ட மட்டத்தில் வலைபந்து, கரபந்து போட்டிகள்

(கோப்பாய்)

கோப்பாய் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 2ஆம் சுற்று வலைபந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்திலும், 2ஆம் சுற்று கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி பி.ப. 1.30 யா/சோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது. அதன்படி வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் பெயர் விபரம் வருமாறு:

**(17 வயதுப் பிரிவு)**

யா/இடைக்காடு ம.வித்தி.எதிர் யா/ஆவரங்கால் மகாஜன வித்தி.

**(15 வயதுப் பிரிவு)**

யா/ஆவரங்கால் மகாஜன வித்தி. எதிர் யா/சோமஸ்கந்தா கல்லூரி, யா/அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் யா/இடைக்காடு ம.வித்தி, யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி. எதிர் யா/ஊரெழு கணேசா வித்தி.

**(17 வயதுப் பிரிவு)**

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி., எதிர் யா/ஊரெழு கணேசா வித்தி., யா/சோமஸ்கந்தக் கல்லூரி எதிர். யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி, யா/அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

**(19 வயதுப் பிரிவு)**

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. எதிர் யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி, யா/இடைக்காடு ம.வித்தி. எதிர் யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.

கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் விபரம் வருமாறு:

**(15 வயதுப் பிரிவு)**

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. எதிர் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/இடைக்காடு மகா வித்தி. எதிர் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

**(17 வயதுப் பிரிவு)**

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. எதிர் யா/ இடைக்காடு மகா வித்தி. யா/ஊரெழு கணேசா வித்தி. எதிர் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**(19 வயதுப் பிரிவு)**

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி. (உ-79)

## ஒரு ஓட்ட வித்தியாசத்தில் ஆட்டம் கண்டது ஆஸி. அணி

மெல்போர்ன் நகரில் இந்தியக் கிரிக்கெற் அணிக்கும, அவுஸ்திரேலிய பிரதமர் அணிக்கும் இடையே கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் ஒரு ஓட்டத்தால் இந்திய அணி வெற்றிபெற்றுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர் முடிவில் 8விக்கெற் இழப்பிற்கு 254ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் ஹேமன் படானி மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 100 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய பிரதமர் அணி சார்பில் ஏமக்டொனால்ட் 3விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியப் பிரதமர் அணியானது, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 6விக்கெற் இழப்பிற்கு 253ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன், ஒரு ஓட்டத்தினால் இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவியிருந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியப் பிரதமர் அணிசார்பில் சி.பிறவுண் 80ஓட்டங்களையும், எம்.நூர்ட் 74ஓட்டங்களையும், ஏ.மைக்டொனால்ட் 45ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் அசிஸ் நேரா மற்றும் பண்டாரி ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களைக் கைப்பற்றி இருந்தார். (உ-68)

## முதன்மை நிலையை தக்க வைப்பதில் தென்னாபிரிக்க அணி அதிக கவனம்

தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியிலும் 13ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றுள்ளது.

போர்ட் எலிசபெத் சென்ஜோர்ஜ் பார்க் விளையாட்டரங்கில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியை 50ஓவர் முடிவில் 7விக்கெற் இழப்பிற்கு 179ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியத் தீவுகள் அணி மட்டுப்படுத்தியிருந்தாலும். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியதன் காரணமாக 166 ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியத் தீவுகள் அணி மட்டுப்படுத்திக் கொண்டது.

இதில் தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்டத்தில் டிப்பென்னர் 83ஓட்டங்களையும் சோன் பொலக் 26ஓட்டங்களையும் தமது அணிகாகப் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள அணிசார்பில் ஹோரே கொலிமோர் 3விக்கெற்றுக்களைக் கைப்பற்றி இருந்தார்.

தொடர்ந்து 180ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் 42.4ஓவர் முடிவிலேயே தமது சகல விக்கெற்றுக்களையும் இழந்து 166 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய ஸ்மித் மற்றும் ராம்போல் ஆகியோர் அதிக பட்சமாக தலா 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில் சோன் பொலக் 4 விக்கெற்றுக்களையும் ஜக்கலிஸ் 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

இதேவேளை, 5சர்வதேச ஒருநாள் போட்டிகள் கொண்ட இவ் ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில் 2:0என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலை வகிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## விளையாட்டுச் செய்திகள்

## எதிரிகளைப் பழிவாங்குவது எப்படி?

# இஸ்ரேலிய தலைவர்கள் ஆராய்கின்றனர்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலியத் தலைநகர் ஜெருசலேமில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு எவ்வாறு பதிலடி கொடுப்பது என்பது குறித்து ஆராய்வதற்காக இஸ்ரேலியத் தலைவர்கள் கூடியுள்ளனர்.

இத்தாக்குதல் பலஸ்தீன மேற்குக்கரை அகதிமுகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என இஸ்ரேலியத் தரப்பினரால் ஊகிக்கப்பட்டுள்ளது.

இதனால், அப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயவே இஸ்ரேலியத் தலைவர்கள் கூடியுள்ளனர்.

ஜெருசலேமில் உள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் உத்தியோகபூர்வ வாஸஸ்தலம் அருகில் நேற்று முன்தினம் பயணிகள் பஸ்ஸில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 10பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் ப.்.தா இயக்கத்துடன் இணைந்து செயற்படும் அல்-அக்ஷா மாவீரர் படையணி உரிமைகோரியுள்ளது.

தமது இயக்கமும் இதில் சம்மந்தப்பட்டிருப்பதாக ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், இத்தாக்குதல் சம்பவத்திற்குப் பதிலடி கொடுக்கும் நோக்கில் இஸ்ரேலிய முக்கய தலைவர்கள் கூடி ஆராயவுள்ளமை இஸ்ரேல் - பலஸ்தீனத்திற்கு இடையிலான முறுகல் நிலையை மேலும் அதிகரிக்கச் செய்யும் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-2)

## மொரோக்கோவில் 8 இலட்சம் சிறுவர்கள் கல்வியை விடுத்து தொழில் புரிகின்றனர்

### அந்நாட்டு தொழில்துறை அமைச்சர் தெரிவிப்பு


(ராபர்ட்)

மொரோக்கோ நாட்டில் பாடசாலை செல்ல வேண்டிய வயதில் உள்ள 8 இலட்சம் சிறுவர்கள பாடசாலைக் கல்வியைத் தொடரவில்லையென்று அந்த நாட்டின் தொழில்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் தங்களது குடும்ப வயல் நிலங்களில் தொழில் புரிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக 84 வீதமான சிறுவர்கள் இவ்வாறு தொழில் புரிவதாக தொழில் அமைச்சர் கூறுகின்றார்.

வட ஆபிரிக்காவில் உள்ள மொரோக்கோ நாட்டில் சுமார் 30 மில்லியன் மக்கள் வாழ்கின்றமையும், இவர்களில் பெரும்பாலானோர் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்(து-2)



சத்திஸ்கார் மாநிலத்தின் நாட்டுப்புறக் கலைஞர்கள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமிற்கு வழங்கிக் கௌரவித்த கலை அலங்காரக் கிரீடம். குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் குடியரசுத் தினத்தையொட்டி சத்திஸ்கார் மாநிலத்திற்குச் சென்றபோதே இக்கிரீடம் வழங்கப்பட்டது.

# கறுப்பின மக்களின் நலனுக்காக சிம்பாப்வே அரசாங்கம் நடவடிக்கை

(கராரே)

சிம்பாப்வேயிலுள்ள வெள்ளையின மக்களின் காணிகள் மற்றும் வயல் நிலங்களை கறுப்பின மக்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு சிம்பாப்வே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது

இந்த சட்ட மூலத்திற்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமென்று நம்பப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்தப் புதிய சடடத்திருத்தம் அரசியல் யாப்புக்கு முரணானது என்று பாராளுமன்ற சட்ட அமைப்புக் கூறியுள்ளது.

இந்த அமைப்பின் தலைவராக சிம்பாப்வே எதிர்க்கட்சியின் தலைவர் செயற்படுகின்றார்.

எவவாறாயினும் சிம்பாட்வே பாராளுமன்றத்தின் ஆளும் கட்சிக்கு பெரும்பானமைப் பலம் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து-2)

## தென்கொரிய பாதுகாப்புத்துறைக்கு இருபுதிய ஆலோசகர்கள் நியமனம்

(சியோல்)

தெனகொரிய ஜனாதிபதி ரோமூகூன் தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கு ஆலோசனை கூறக்கூடிய இருவரை நியமித்துள்ளார்.

தேசிய புலனாய்வுத் துறையின் உயரதிகாரியான குவாங் ஜிங்கோ பாதுகாப்பு ஆலோசகராகவும் ஜிங் குவாங்ஷி பொலிஸ் பாதுகாப்பு ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திடீர் மாற்றங்களுக்கான காரணங்கள் எதனையும் ஜனாதிபதி ரோமூகூன் வெளியிடவில்லை.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னராக வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்கள் தொடர்பான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு தென்கொரியா உதவி வருகின்ற நிலையில் இப்பதவி மாற்றங்கள் இடம்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (து-2)

WORLD NEWS
உலக தரிசனம்

## உகண்டாவில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ளும்

(கம்பாலா)

உகண்டாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

உகண்டா ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமையவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக ரொய்ட்டர் செய்தி கூறுகின்றது.

உகண்டா பிரிவினைவாத இயக்கமான எல்.ஆர்.ஏ அமைபபுக்கு எதிராக உகண்டா ஜனாதிபதி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமையவே இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் யுத்தத்திற்குச் சிறுவர்களை ஈடுபடுத்தியது பாலியல் வல்லுறவுகள் உட்படப் பல குற்றச்சாட்டுக்கள் இந்த அமைப்பிற்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்தன.

இக்குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணைகள் யூன்மாதமளவில் இடம்பெறும் என சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (து-2)

## மண்சரிவில் 14பேர் பலி

(ஜகார்த்தா)

இதோனேஷியாவில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாகப் 14பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேஷிய மத்திய மாகாணமான ஜாவாவில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த சிலதினங்களாக இந்த மாகாணத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவினால பல வீடுகள் சேதமடைநதுள்ளன.

இதன் காரணமாக மேலும் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது. (து-2)

## தடுத்துவைக்கப்பட்ட பாகிஸ்தான் பிரஜைகள் 21பேர் விடுதலை

(காபூல்)

ஆப்கானிஸ்தான் அதிகாரிகளினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 21 பாகிஸ்தான் பிரஜைகள் நேற்று முன்தினம் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

அல்-கெய்டா அமைப்புடனும் தலிபான் தீவிரவாத அமைப்புடனும் இணைந்து செயற்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு ஆப்கானிஸ்தான் அதிகாரிகளினால் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இருவாரங்களிற்கு முன்னர் 49 பாகிஸ்தான் கைதிகள் ஆப்கானிஸ்தான் அதிகாரிகளினால் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-2)

## 'இந்தியனைத் தேர்ந்தெடு' என்பதே பா.ஜ.கவின் தேர்தல் கோஷம்

### இலகணேசன் அறிவிப்பு

(சென்னை)


பாரதிய ஜனதாக்கட்சி-அ.தி.மு.கவுக்கு இடையிலான தொகுதிப் பங்கடு குறித்துப் பேச்சுக்கள் ஓரிரு நாட்களில் தொடங்கும் என்று பா.ஜ.க.வின் அகில இந்திய செயலாளர் இல கணேசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல்கள் விரைவில் நடைபெறவிருப்பதால் கூட்டணி பற்றிய நடவடிக்கைகளை விரைவாக முடிக்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

பாரதய ஜனதாக் கட்சி-அ.தி.மு. கூட்டணியில் சேர்வதற்கு வேறு கட்சிகள் எதுவும் இதுவரை தங்களை அணுகவில்லை என்றும், கூட்டணியில் சேரப் பிற கட்சிகள் முன்வந்தால் அ.தி.மு.கவுடன் கலந்து பேசிய பிறகு முடிவெடுக்கப்படும் என தெரிவித்த அவர்,

வரும் மக்களவைத் தேர்தலில் மற்றைய கட்சிகளைப் போன்று தேர்தல் அறிக்கையைத் தயாரிக்காமல் தேசிய அளவில் அனைத்து மாநிலங்களின் வேலைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும்வகையில் 'தொலைநோக்குத் திட்டம் 2010' என்ற ஆவணம் தயாரிக்கப்படுகின்றது என்றும், தமிழ்நாட்டில் ஹெஜ்ராஜா தலைமையில் இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

மக்களவைத் தேர்தலில் 'இந்தியனைத் தேர்ந்தெடு என்பதே பாரதிய ஜனதாக் கட்சியின் தேர்தல் அறிவிப்பாக இருக்கும் என்று கூறிய இலகணேசன் 'இந்தியனாக இரு! இந்தியப் பொருட்களையே வாங்கு!' என்ற கோஷத்தை எழுப்பிய காங்கிரஸ், 'இந்தியனைத் தேர்ந்தெடு' என்ற கோஷத்தைப் பாரதிய ஜனதாக் கட்சி எழுப்பினால் அதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் என்று கூறினார். (து)



மக்களவைத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள பரபரப்பான சூழ்நிலையிலும் மறைந்த மக்களவையின் உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தியின் அவையைவிட்டு வெளியேறும் வாஜ்பாய்.



மலச்சிக்கல் நோயினால் சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவமனையில் நான்கு நாட்களாகச் சிகிச்சை பெற்றுவிட்டு இருப்பிடம் திரும்பும் இந்த யானை தனக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் நால்வருக்கும் நன்றி செலுத்தும் காட்சி.

# வீரப்பனின் நான்கு சகாக்களுக்கு விதிக்கப்பட்ட ஆயுள்தண்டனை மரணதண்டனையாக மாற்றம்

(சென்னை)

கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் 21பேர் உயிரிழக்கக் காரணமான சந்தனக் கடத்தல் வீரப்பனின் 4 சகாக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஆயுள் தண்டனையை மரணதண்டனையாக மாற்றி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்க நான்கு பேர்களுக்கும் ஆயுள் தண்டனை விதித்து தடா நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்துக் கர்நாடக அரசு தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் இவ்வாறு உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

வீரப்பனையும் அவன் கும்பலையும் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழக காவல்துறையினரையும் வீரப்பன் நடமாடும் பகுதியில் ககவல் அறிந்தவர்களையும் ஏற்றிக் கொண்டு சென்ற பேருந்தைக் கர்நாடகத்தில் காளான் என்ற இடத்தருகே இந்த 4பேரும் கண்ணிவெடி வைத்துத் தகர்த்ததில் 21பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் காவல்துறையினர்.

இச்சம்பவத்தில், காவல்துறை கண்காணிப்பாளர் உட்படப் 14 பேருக்குக் காயம் ஏற்பட்டது. (து)

## சிறு விளம்பரம்

**விற்பனை**

சகல விதமான T.V களுக்கு சிறந்த முறையில் அன்ரனா பொருத்திக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற், அன்ரனா உதிரிப் பாகங்கள் பெற்றுக் கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்: நியூ சிற்றி றேடேர்ஸ்,135 கஸ்தூரியார் வீதி (குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 222-3226 (C/7313)


### சடலங்கள் கண்டுபிடிப்பு

(மன்னார்)

மன்னார் முருங்கன் காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் இருந்த 3 சடலங்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

வர்த்தக நடவடிக்கைகளுக்காக வன்னிப்பகுதியில் இருந்து மன்னாருக்குச் சென்றவர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என மன்னார் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

(தி-61)

### ஆன்மீக எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தினத்தை ஒட்டிய ஆன்மீக எழுச்சி விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றத் தலைவர் சிவவதனி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி எஸ்.குமாரவடிவேல் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்புச் சொற்பொழிவினை டாக்டர் சிவசங்கர், இராஜமகேந்திர சிங்கம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (உ)

### விழிப்புணர்வுப் படக்காட்சி

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்குப் பகுதியின் சுதுமலை, ஆனைக்கோட்டை, சாவல்கட்டுப்பகுதிகளில் உள்ள முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் ஊடாக சுகாதார விழிப்புணர்வுப் படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

பல், முரசு வியாதிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியமான சுகாதார வாழ்விற்குத் தேவையான அம்சங்கள் அடங்கியதாக இப்படக்காட்சி இடம் பெற்றுவருகின்றது. (உ-252)

# ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பிரதேச அலகுகள் - ஒரு குறிப்பு

இலங்கையில் தமிழ் மொழி வகிக்கும் இடத்தினை உற்று நோக்கும் பொழுது மிக முக்கியமான ஓர் அம்சம் தெரியவருகிறது.இலங்கையில் தமிழ் மொழி தங்களை இரண்டு வேறு இனத்துவக் குழுக்களாகக் கருதும் (Ethnic Groups) இரண்டு இனங்களின் முதல் மொழி/தாய் மொழியாகவுள்ளது.அதாவது தமிழகத்தில் உள்ளது போன்று தமிழ் பேசுபவர்கள் எல்லோரும் தமிழர்களல்லர்.இது அந்த மொழியின் அசைவியக்கத்திலே பெரும்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.மொழிவழியாக வரும் ஓர் ஒருமைப்பாடு தெரியும். அதே வேளையில் (தமிழ் பேசும் மக்கள்) பண்பாடு சமூகம் என்கின்ற வகையில் பன்முகப்பாடு ஒன்றும் தொழிற்படுகின்றது. இந்தப் பண்பு இலங்கையில் தமிழின் தொழிற்பாட்டில் ஓர் அசாதாரண உத்வேகத்தை வெளிப்படுத்துகின்றது.

மேலுமொரு உண்மையையும் பட்டவர்த்தனமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இங்குள்ள "தமிழ்ச் சமூகம்" என்று எடுக்கப் பெறும். சமூகத்தின் "பொதுப்" பண்பாட்டு அம்சங்களைப் பார்க்கும் பொழுது அங்கு கணிசமான வேறுபாடுகள், தொழிற்பாடுகள் நிலவுவதைக் காணலாம். இத்தகைய ஒரு நிலை தமிழ் நாட்டிலும் உண்டு. ஆனால் இங்கு அதற்கு சில வேளைகளில் ஓர் அரசியல் பரிமாணமுமுண்டு. உதாரணத்திற்கு மலையகத் தமிழருக்கும் இலங்கையின் பிற பகுதித் தமிழருக்குமுள்ள தனித்துவமான அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு அம்சங்களைக் குறிப்பிடலாம்.

இந்த "இருக்கைகள்" ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பரப்பையும் ஆழத்தையும் நிச்சயமாக விஸ்தரிக்கின்றன.

தமிழ்பேசும் மக்கள் என்ற நிலையில் காணப்படும் மொழி வழிப்பாட்டு ஒருமைப்பாட்டையும் தமிழ் மக்கள் எனும் வகையில் காணப்படும் சமூக பண்பாட்டு ஒருமைப்பாட்டையும் எடுத்துக் காட்டும் ஈழத்தத் தமிழ் இலக்கியம் அதேவேளையில் அவர்களின் தனித்துவத்தையும் பேண வேண்டுவது அவசியமாகும்.

இதனால் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் "பிரதேச" முக்கியத்துவம் மிக ஆழமாக ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். அதே வேளையில் இப்பிரதேசங்களினூடே தொழிற்படுகின்ற ஒருமைப்பாட்டையும் ஆராய்தல் வேண்டும். இவை இரண்டிற்கும் இலக்கியமே பிரதான கருவியாகின்றது.

ஒட்டுமொத்தமான "ஈழத்துத்" தமிழ் இலக்கியமென்பது இந்தப் பண்பின் பிரதிநிதியாக அமைதல்வேண்டும்.

அடுத்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் பேசப்படுகின்ற அல்லது பேசப்படக்கூடிய இந்த "அலகுகள்" யாவை என்பதை நோக்குவோம்.

இந்தப்பிரச்சினையை அணுகும் பொழுது மதம், பண்பாடு, பொருளாதார இருக்கை, அரசியல் பிரக்ஞை, புவியியற் கூறு என்பனவற்றை மனங்கொளல் அவசியம்.இவைதான் சமூக இயற்கையைத் தீர்மானிக்கின்றன.அந்தச் சமூக இருக்கையின் பிரக்ஞைதான் இலக்கியத்தின் தோற்றத்திற்கு ஆளாகின்றது.

புவியியற் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அதே வேளையில் சமூகப் பண்பாட்டு அகவேறுபாடுகளையும் மனங்கொண்டுநோக்கும்பொழுது இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் (அதாவது தமிழ் இலக்கியம் மூலம் தங்கள் உணர்வு/உணர்ச்சி அந்தரங்கங்களை வெளியிடும் கூட்டத்தினர்) பின்வரும் பிரதேசங்களில் கால் கொண்டு வாழ்கின்றனர் என்பது தெரிய வரும்.

மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, மன்னார், யாழ்ப்பாணம்,மலையகம்,மேற்குக் கரையோரம் (பிரதானமாப் புத்தளம் முதல் நீர்கொழும்பு வரை), தென் பகுதி (பாணந்துறை முதல் திக்வெல்லை வரை)

இந்தப் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் ஈழத்தின் உப பண்பாடுகளாக(sup culture) கருதப் படத்தக்கவையாகும். இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருபண்பாட்டு ஆளுமையுண்டு.

இதுவரை வெளிவந்துள்ள ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் படைப்பியற் பாரம்பரியத்தை நோக்கினால் இவ்வுண்மை தெரியவரும்.

இவ்வாறு பார்க்கும் பொழுது கொழும்பையும் ஒரு கூறாகக் கொள்ளவேண்டுமோ என்ற ஒரு வினாக்கிளம்புவது இயல்பே. நாட்டின் தலைநகர் எனும் வகையில் கொழும்பு முக்கியமான இடமேயாகும். ஆனால் எந்தளவிற்கு இது ஒரு தனிப்பிரதேசமென்பது கேள்விக்குரியதே. கொழும்புக்கு ஒருபெரு நகர்ப்புறப் பரிமாணமுள்ளதுண்மையே. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு,தென்னிலங்கை, மலையகம் போன்று இதனையும் ஒரு "தளமாகக்" கொள்ளலாம் என்பது கேள்விக்குரியதே.

கொழும்பைவிட்டு நோக்கினால் மேலே தரப்பட்டுள்ள பிர தேசங்கள் நிச்சயமாக தத்த மக்கென தனியாளுமை கொண்டுள்ள பிரதேசங்கள் என்பது தெரியும். இவற்றின் கலை, இலக்கிய வரலாற்றைப் பார்க்கும் பொழுதும் இவ்வுண்மை புலப்படும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் இந்தப் பன்முகப்பாடு காரணமாக இங்கு மதநிலை இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுவதையும் நாம் அவதானிக்க வேண்டும்.இதுவும் ஒரு முக்கிய பண்பாட்டு வெளிப்பாடாகும்.

ஈழத்தின் தமிழ் ஒருமையை துண்டாடிப் பார்ப்பது அல்ல இக்கட்டுரையின் நோக்கம்.இதன் நோக்கம் இன்னொன்று.அது முக்கியமானது.ஈழத்தின் தமிழ் இலக்கியம் எனும் பொழுது நாம் இப்பிரதேசங்கள் ஒவ்வொன்றினதும் படைப்புக்களைத் தொகுத்து எடுத்துக் கொண்டோமோ என்பதே அது.முதலாவதாக நாம் நோக்க வேண்டுவது இவ்வலகுகள் ஒவ்வொன்றினதும் கலைப்படைப்புக்களைத் தொகுத்தெடுப்பதும் அவையொவ்வொன்றின் முக்கியத்துவம் குறையாத முறையில் அவற்றை இணைத்து நோக்குவதுமாகும்.இது ஈழத்துத் தமிழ் இலக்கியவரலாற்றின் பிரதான கடமையாகும்.அவ்வாறு செல்கின்ற பொழுதுதான் ஒட்டுமொத்தமாக ஈழத்துத் தமிழ் இலக்கியவரலாறு மேற்கிளம்பும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியவரலாறு என்பதை வெறுமனே புத்தகங்கள், ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல்களாக நோக்காது ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு என்பது எவ்வாறு அந்த மக்களின் ஜீவ உயிர்ப்பாக அந்த உயிர்ப்பின் வெளிப்பாடாக அமைந்துள்ளதென்பதை அறிந்து கொள்வதுதான்.

இதனை நாங்கள் காய்தல் உவத்தலின்றி செய்தால் இப்பிரதேசங்களிடையே காணப்படும் ஊடாட்டம் நன்கு தெரிய வரும். தொடர்பு வளர்ச்சிகளுடன் இவை எவ்வாறு ஒருங்கிணைகின்றன என்ற உண்மை தெரியவரும்.இது மிக முக்கியமாகும். ஏனெனில் இந்தப் பிரதேச நிலைப்பாடு தேச மட்டத்தில் நடைபெறுகின்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்ற பொழுது பிரதேச இலக்கிய படைப்புக்களிற்கூடாகவும் பிரதேசங்களை ஊடறுத்துச் செல்லும் இலக்கியத்திற் கூடாகவும் ஈழத்து இலக்கியம் என்ற முழுமை தெரியும்.

பாகங்களை அறியாமல் முழுமையை அறிய முடியாது. முழுமையினுள்ளே வைத்துத் தான் பாகங்களின் பயன்பாட்டை அறிய முடியும்.

ஈழத் தமிழ் இலக்கியத்தின் பன்முகப்பாடும் ஒருமைப்பாடும் விரிவாக ஆராயப்படவேண்டும்.□

**கார்த்திகேசு சிவத்தம்பி**
முது தமிழ்ப் பேராசிரியர்

### 2,444 மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை

(மல்லாவி)

மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பாலிநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 444 மாணவப் பருவத்தினர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந் நிறுவனம் கடந்த காலத்தில் நடத்திய கள ஆய்வுகள் மூலம் இத் தொகை கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் பாடசாலை செல்ல வேண்டிய வயதுடையவர்களாகக் காணப்படுகின்ற போதும், பாடசாலை செல்லாதிருப்பதற்கு வறுமை மற்றும் வருமானமின்மை குடும்பத் தலைவர்கள் இல்லாமை என்பன காரணம் என உணரப்பட்டுள்ளது.

இம் மாணவர்களை பாடசாலைகளில் இணைத்து கல்வியைத் தொடர்வதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் இக்குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகைகள் செய்தல் ஆகிய முயற்சிகளில் இவ் அபிவிருத்தி நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-4)

# விவசாயத்திட்டங்கள் ஒக்ரோபரில் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் 2 ஆவது கட்ட நடவடிக்கைகள் ஒக்ரோபர் மாதமளவில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

உலக வங்கியின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டத்தின் முதலாவது கட்ட நடவடிக்கைகளுக்கான கோடிக்கணக்கான நிதி செலவிடப்பட்டது.

இதன் 2ஆவது கட்ட நடவடிக்கைகளுக்கான 6 வருட காலத்தில் 7 கோடி ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

இந் நிதி உதவி மூலம் நிலையான சமூக பொருளாதாரத்துக்கு வழிவகுத்தல், வறுமை ஒழிப்பு, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல், அபிவிருத்தி வேலைவாய்ப்பு,நீர்ப்பாசன திட்டங்களின் புனரமைப்பு உட்பட பல நடவடிக்கைகள் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(தி-61)

### கட்டைக்காட்டில் வீட்டுத் திட்டம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்கும் பணியில் நிகொட் நிறுவனம் ஈடுபட்டுவருகின்றது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் இடம்பெற்றுவரும் இவ் 125 வீடமைப்புத்திட்டம் எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் பூர்த்திசெய்யப்பட்டு மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளது.

(உ-35)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அபிவிருத்திகள் துரிதம்

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன் படிக்கை காரணமாக பல வெற்றிகளை அடைய முடிந்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை-பிறேசில் நாடுகளுக்கிடையில் வர்த்தகத்தை மேம்படுத்தும் பொருட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர், இவ்வுடன்படிக்கை கைச்சாத்திப்பட்டதன் பின்னர் இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் 3 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

அத்துடன் உல்லாச மற்றும் வர்த்தகத் துறைகளிலும் அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை, பிறேசிலில் இருந்து வருகை தந்துள்ள வர்த்தகக் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களை டிரோன் பெர்னாண்டோ, ரவிகருணாநாயக்க ஆகியோரையும் சந்திக்கவுள்ளனர்.

(தி-61)


உ
கணபதி துணை
காரைநகர் வாரிவளவு
ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
மஹா கும்பாபிஷேக தெய்வீகச் சொற்பொழிவு



சொற்பொழிவாளர் தென்னிந்தியா, தஞ்சாவூர் சேக்கிழார் அடிப்பொடி, சைவசித்தாந்த கலாநிதி, இலக்கியகலாநிதி,
நடராஜன் இராமச்சந்திரன்
B.A.,B.L.,D.Lit. (Hon.)

31. 01. 2004 சனிக்கிழமை மாலை — ஆலய வழிபாடு
01. 02. 2004 ஞாயிற்றுக்கிழமை காலை — சைவ சித்தாந்த வாழ்வியல்

மஹா கும்பாபிஷேகம்
01.02.2004 ஞாயிற்றுக்கிழமை

மஹா கும்பாபிஷேக நிகழ்வில் யாழ்ப்பாணத்து பிரபல தவில், நாதஸ்வர கலைஞர்களின் இசை ஆராதனை இடம்பெறும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்,
வாரிவளவு,
காரைநகர்.

இங்ஙனம்
தேவஸ்தான நிர்வாகத்தினர்

(சி-7322)


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஹெல்கீசன், தமிழ்ச்செல்வன் சந்திப்பு

## பல விடயங்கள் குறித்து விளக்கம்

(கொழும்பு)

தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின்



அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின் போது, எதிர் வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற வுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந் நாடுகளுக்கிடையே பொதுவான நிலைப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆமிடேஜ், பிரதான உதவி வழங்கும் நாடுகளான ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள வுள்ளனர்.



சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்ட போதிலும், யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பினரும் கடைப்பிடித்து வருவதை உலக நாடுகள் வரவேற்று இருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், தமிழ்ச் செல்வனுக்கு விளக்கினார். (தி-61)

## ரயில்வே ஊழியர்களின் பிரச்சினை

### திறைசேரியுடன் சம்பந்தப்பட்டது

### நழுவுகிறார் திலக் மாரப்பன

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து



திறைசேரி ஆணையாளருடன் பேசியே முடிவு எடுக்கப்படவேண்டும் என போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

தொடரும் ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் பற்றி கருத்துத் தெரிவித்த போதே திலக் மாரப்பன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரயில்வே ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்கக் கூடியதாக இருக்கின்றபோதும் இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிதி தேவையாகவுள்ளது. இதனை திறைசேரியூடாகவே பெறுவது சாத்தியமாகும்.

இதேவேளை, ரயில்வே ஊழியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ரயில்வே அதிகார சபை சட்டமூலத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் போக்குவரத்து அமைச்சுக்கு இல்லை இது பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பதனூடாகவே சாத்தியமாகும்.

இதற்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவேண்டும் எனவும் அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## காஞ்சிபுரத்தை அபிவிருத்தி செய்ய கோரிக்கை

(சுதுமலை)

வலி.தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் மாதகல் கிராமத்தில் உள்ள காஞ்சிபுரம் பகுதியை அபிவிருத்தி செய்யுமாறு கோரி, அப்பகுதி கலைவாணி சன சமூக நிலையம் மானிப்பாய் பிர்தேச சபைக்கும் சன்டிலிப்பாய் பிரதேச செயலர்க்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மாதகல் கிராமம் முற்றாகப் பாதிப்படைந் துள்ளது.

தற்போது கடந்த 8 வருடங்களிற்குப் பின்னர் 75 ற்கும் மேற்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் மீளக் குடியமர்ந் துள்ளனர் எனினும், இப்பகுதியில் உள்ள சிறுவர்களின் முன்பள்ளி, சனசமூக நிலையம் என்பன இயங்க முடியாத அளவுக்கு உள்ளன.

அத்துடன், மலசல கூடங்கள் யாவும் பாவிக்க முடியாதவாறு சேதப்பட்டுள்ளன.


கல்வி, சமயம், அபிவிருத்தியில் இப்பகுதி மக்கள் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதால் மேற்படி பகுதிக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னிலைப்படுத் துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


(உ-252)

## உளவியல் கருத்தரங்கு


(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருச்சபை வட பிராந்திய வாலிபர் சங்கத்தின் ஏற்





பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வளவில் போர்க்காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றி, பாடசாலையை புதுமெருகூட்டும் முன்னோடி நடவடிக்கையில் வேது பொறியியல் படைப்பிரிவு ஈடு பட்டுள்ளது.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
கூறுவிலை கோரல்

## கூறுவிலை கோரல்

பரமேஸ்வரா ஒழுங்கை, திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரிப்படிப்புகள் அலகு இரு அடுக்குக் கட்டிடம் மற்றும் அதனோடமைந்த காணியில் சுத்திகரிப்பு / தேவையற்ற வளரிகள் வெட்டிப் பராமரித்தல் வேலைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் கூறுவிலைப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக உதவிப்பதிவாளர் / நிர்வாகம் அவர்களிடம் இருந்து பின்வரும் வைப்புத் தொகைக்கான பணத்தை செலுத்தியதற்கான யாழ்.பல்கலைக்கழக காசாளரது பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 10.02.2004 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 3000/=

மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 250/=

பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப் படிவங்கள் 13.02.2004 அன்று பி.ப. 3.00 மணிக்கு முன்பதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவேண்டும்.

கூறுவிலைப் படிவங்களை, தேவைப்படின் யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வேலை நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்கள் ஏதாவது தேவைப்படின் யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் / நிர்வாகத்திடமிருந்து (தொலைபேசி இலக்கம் :- 021-222 6517) பெற்றுக்கொள்ளமுடியும்.

திருமதி .நா.தங்கராசா,
பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

தபால் பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C/7325)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருச்சபை வட பிராந்திய வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் உளவியல் கருத்தரங்கு ஒன்று நல்லூர் பரி. யாக்கோபு ஆலய மண்டபத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு யாழ்.ராத வல்லி தலைமையில் நடைபெற வுள்ளது.

இக்கருத்தரங்கில், யாழ். பல்கலைக்கழக உளவியல்துறை பகுதிநேர விரிவுரையாளர் அருட்திரு பிரான்சிஸ் டானியல் அடிகளார் ''மனித வளர்ச்சிக்கு சுய ஆய்வு'' என்ற கருப்பொருளில் உரையாற்றவுள்ளார். (உ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடல் உயிரின வளத் தொழில் நுட்பப் பாடத்தை கற்பித்துக் கொண்டிருக்கும் சகல ஆசிரியர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.கல்வி வலய அலுவலகத்தில் உள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (உ)

### அன்பளிப்பு

(மருதங்கேணி)

மந்திகை வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலியா வாழ் புற்றளையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி குமாரசாமி சேனாதிராசா ஈ.சி.ஜி.மொனிற்றர் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். (உ-35)



கச்சாய் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள அரியாலை பிட்டி இந்து மயானத்தில் இறுதிக் கிரிகைகள் செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

52வது சேனாதிபதியின் ஆலோசனைக்கமைய 521 படையணியின் கட்டளை அதிகாரி தலைமையில் இந்த மயானம் அண்மையில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார ஊழியர் போராட்டம் பல்வேறு வழிவங்களில் முன்னெடுப்பு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுகாதார துறைசார் உழியர்கள் சுகவீன லீவுப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டத்தினால் கொழும்பு மருத்துவ மனைகளின் அன்றாடப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாக கொழும்புத் தேசிய வைத்திய சாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறைசார் ஊழியர்களின் சுகவீன லீவுப் போராட்டம் காரணமாக கொழும்புத் தேசிய வைத்திய சாலையில் நடைபெற விருந்த அனைத்து சத்திர சிகிச்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

இதேவேளை, தனியார்துறையினரின் ஒத்துழைப்புடன் ஆய்வு கூடப் பரிசோதனைகள் மேற்கொளளப்படுகின்றதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ள சுகாதாரசேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 12 பேரின் உடல் நிலை கவலைக்கிட மாக வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-60,10)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

31

முதலாம் பகுதி

## தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

நெல் வயல்களிலிலே கோடை காலத்திற் சிறுதானியங்களைச் செய்கை பண்ணுவார்கள். அது சிறு போகம் எனப்படும். எள்ளு, பயறு, உழுந்து, குரக்கன் முதலியவற்றை அவ்வாறு செய்கை பண்ணுவதுண்டு. அந்தச் செய்கை வைகாசி மாதத்தில் முடிவடையும். அது முதல் அடுத்த மழைக்காலம் வரையும் வயல்கள் வெறுமனே இருப்பதாற் கட்டாக்காலியான ஆடு, மாடுகள் அவற்றிலே திரியும்.

மாற்றுப் பயிர்ச்செய்கை முறை, நிலங்களை உரமிட்டு வளம் படுத்துதல் ஆகியமுறைகள் நெடுங்காலமாக வழக்கிலிருந்து வந்துள்ளன. இங்கிலாந்திலே விவசாயப் புரட்சி ஏற்படுவதற்கும் முற்பட்ட காலங்களில் இருந்து தென்னிந்தியாவிலும் வடஇலங்கையிலும் மாற்றுப் பயிர்ச்செய்கை முறையினைக் கையாண்டுள்ளனர். அந்த முறை வயற்காணிகளிலும் தோட்டக்காணிகளிலும் பின்பற்றப்பட்டது. செய்கை பண்ணும் வயல்களுக்குந் தோட்டங்களுக்கும் வருடா வருடம் உரமிடுவதும் பழங்காலம் முதலாக நிலவிவரும் வழக்கமாகும். வீடு வளவுகளிலும் பட்டிகளிலும் வளர்க்கும் ஆடுமாடுகளின் எருவைச் சேகரித்து வைத்து விளை நிலங்களிலே உரமிடுவது வழக்கம்.

அதேபோல இலைகுழை, குப்பை கூளம் முதலானவற்றையும் கிடங்குகளிலே போட்டு அவை உக்கிய பின்பு உரமாகப் பயன்படுத்துவர். செய்கை பண்ணும் நிலங்களை இவ்விதமாக உரமூட்டும் முறை இலங்கையில் உள்ள பிற சமூகங்களும் பின்பற்றாத ஒன்றாகும். மாதோட்டம், வன்னி ஆகிய பகுதிகளிலே வயல் நிலங்கள் மிகுந்து காணப்பட்டன. ஓரளவு நீர்ப்பாசனஞ் செய்வதற்கான வசதிகளும் காணப்பட்டன. ஆயினும் நிலங்களைச் செய்கை பண்ணுவதற்கு வேண்டிய போதிய குடியானவர்கள் அங்கு காணப்படவில்லை. மலேரியா போன்ற நோய்களினாலும் அங்குள்ள குடிசனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். செய்கை பண்ணப்படும் புரோசனங்களுக்கும் வன விலங்குகள் அதிக சேதம் விளைவித்தன. விற்பனை செய்யும் அளவிற்கு அங்குள்ள குடிகள் தானியங்களை உற்பத்தி செய்யவில்லை. வன்னியில் உற்பத்தியான பருத்தி யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகப் 17 ஆம் நூற்றாண்டுக்குரிய ஆவணங்களிற் குறிப்புண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தில் வாழ்ந்த மக்களுக்குத் தேவையான அளவு நெல்லை உற்பத்தி செய்து கொள்ள முடியாதிருந்தது. எனவே தென்னிந்தியப் பிரதேசங்களிலிருந்தும் நெல், அரிசி ஆகியவற்றை இறக்குமதி செய்தனர்.

செம்மண் அடங்கிய நிலப்பகுதிகளிலே வெள்ளம் தங்கி நிற்பதில்லை அதனால் அங்கு நெல் வயல்களை அமைத்துக்கொள்ள முடியவில்லை. அங்குள்ள மண் மிகுந்த வளமுடையது. எனவே தோட்டங்களிற் காய் கறி வகைகளையும், கிழங்கு வகைகளையும், வாழை, பலா, மா, கமுகு, வெற்றிலை முதலியவற்றையும் மிகுதியாக உண்டு பண்ணுவது நெடுங்கால வழமையாகும். அங்குள்ள கிணறுகள் மிகவும் ஆழமானவை. அவற்றிலிருந்து மிக நீளமான பனை மரத்தாலான ஏற்றங்கள் மூலமாகத் தோட்டப் பயிர்களுக்கு நீர் இறைப்பது வழமை. இந்த முறை முற்காலங்களிலே தமிழகத்தினின்றுஞ் சென்று யாழ்ப்பாணத்திலே குடியேறியவர்களினால் அங்கு அறிமுகம் செய்யப்பட்ட ஒன்றாகும். தோட்டக்காணிகளில் மழைக்காலங்களிலே சாமை, குரக்கன், தினை, வரகு முதலியவற்றைச் செய்கை பண்ணுவதும் முற்கால வழமையாகும். அங்கு வாழ்ந்தவர்கள் இவற்றையே பெரும்பாலும் உணவு தானியங்களாகப் பயன்படுத்தினார்கள். தோட்டங்களில் உண்டான காய் கறிகளையும் பழவகைகளையும் சந்தைகளிலே உற்பத்தியாளர் விற்பனை செய்தனர். பண்டத்தரிப்பு, சங்கானை, சுன்னாகம், கொடிகாமம் முதலிய இடங்களிலுள்ள சந்தைகள் தமிழரசர் காலம் முதலாகவே அமைந்து வந்துள்ளன. 17 ஆம்

வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்
கவிதைப் போட்டி -2004
1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
"தமிழா உனக்கேன் இக்கதி"

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி
இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த
கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்

யும் பழவகைகளையும் சந்தைகளிலே உற்பத்தியாளர் விற்பனை செய்தனர். பண்டத்தரிப்பு, சங்கானை, சுன்னாகம், கொடிகாமம் முதலிய இடங்களிலுள்ள சந்தைகள் தமிழரசர் காலம் முதலாகவே அமைந்து வந்துள்ளன. 17 ஆம் நூற்றாண்டுத் தோம்புகளிலே இவற்றைப் பற்றிய குறிப்புகள் இருந்தன.

## புகையிலைத் தோட்டங்கள்

புகையிலை வியாபாரத்தின் மூலம் அரசாங்கத்திற்குக்கிடைத்த வருமானங்கள் பற்றிப் போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலம் முதலாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. குத்தகைக் காரருக்கு மட்டுமே புகையிலையை விற்கவேண்டும் என்று 1635 இலே போர்த்துக்கேயர் கட்டளையொன்றைப் பிரகடனப்படுத்தினார்கள். கி.பி.1645 இற் புகையிலை விற்பனை மூலம் 5000 பர்தாக்கள் அரசினருக்கு வரியாகக் கிடைத்தது. இது இராச்சியத்தில் இருந்து அவர்கள் வரியாகப் பெற்றுள்ள முழுத்தொகையில் 20 வீதம் என்பது குறிப்பிடத் தகுந்தது. காலப்போக்கிலே புகையிலைத் தோட்டங்களுக்கெனத் தனியான தோம்பு தயாரிக்கப்பட்டது. தேசாதிபதி ஒருவர் யாழ்ப்பாணத்து அதிகாரிகளுக்கு எழுதிய அறிக்கையொன்றில் உள்ள மேல்வரும் குறிப்பினால் இது தெளிவாகின்றது:

"முன்னே கூறியதைப் போலே வடமராட்சியில் உள்ள நிலங்களை அளவு செய்து அறிந்து கொண்ட விபரங்களைத் தோம்பிலே பதிவு செய்யும் வேலைகள் முடிந்துவிட்டன. சனங்கள் அடிக்கடி முறைப்பாடு செய்து வருவதால் புகையிலைத் தோட்டங்கள் பற்றிய தோம்பினை வரகுக் காணித் தோம்பாக மாற்றவேண்டும். ஆனால், அவர்கள் புகையிலைச் செய்கையினை ஆரம்பிக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட தொகையினை அரசாங்கத்திற்குக் கடமையாக கொடுக்கவேண்டும் எனவே, தோட்டங்களை ஒவ்வொரு வருடமும் பரிசோதனை செய்யவேண்டும். புகையிலையைச் செய்கை பண்ணுவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளாத தோட்டங்களின் சொந்தக்காரர் தண்டம் இறுக்கவேண்டும்"

பதினேழாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்துப் பொருளாதாரத்திற் புகையிலை ஒரு முக்கிய விடயத்தைப் பெற்று விட்டது. கணிசமான எண்ணிக்கையிற் புகையிலைத் தோட்டங்கள் காணப்பட்டன. புகையிலைச் செய்கை, புகையிலை வியாபாரம், சுருட்டுத் தொழில் ஆகியவை இலாபகரமானவையாகக் காணப்பட்டன. புகையிலையை மலையாள தேசத்திற்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்தார்கள். அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் புகையிலைச் செய்கை மூலங் கிடைத்ததோடு தேசத்திற் பணப்புழக்கமும் அதனால் அதிகரித்தது.

(தொடரும்)

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

**அலுவலகப்பாவனைக்கு**

| | |
|---|---|
| | |

**முழுப்பெயர்**..........................
..........................

**தபால் முகவரி**..........................
..........................

**பிறந்த திகதி**..........................

**தே.அ.அ. இல** ..........................

**மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.**

..........
திகதி

..............................
போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

...............
திகதி

..............................
போட்டியாளர்கையொப்பம்

# செய்தித் துளிகள்

## வீடுகள் அமைக்க அமைச்சர் நடவடிக்கை

(கல்வயல்)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக வீடுகள் சேதமடைந்துள்ள கல்வயல் வாழ் குடும்பங்களுக்கு வீகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்து கலாசார அமைச்சர் மேற்கொண்டு வருகின்றார்.

மேற்படி பகுதியில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ்வாழும் தெரிவு செய்யப்பட்ட 40குடும்பங்களுக்கே இவ்வாறு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (உ-36)

## விமர்சன அரங்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, கூர் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் தேவ காந்தன் எழுதிய "யுத்தத்தின் முதலாம் அதிகாரம்" (The prime Cause Behind The war) நாவலின் விமர்சன அரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்.ஆரிய குளத்தில் உள்ள எழுத்தாளர் ஒன்றியத்தில் இடம்பெறவுள்ளது.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் க.சட்டநாதன், நந்தி ஆகியோர் விமர்சன உரைகளை ஆற்றவுள்ளனர். (உ)

## மீளக்குடியமர படையினர் அனுமதி

(மடு)

மன்னாரில் உள்ள மன்னவராஜன் மற்றும் கட்டை அடம்பன் ஆகிய பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

1990இல் மேற்படி பகுதியை படையினர் ஆக்கிரமித்த போது இடம்பெயர்ந்த குடும்பங்கள் பல்வேறு இடங்களிலும் தஞ்சம்புகுந்து வாழ்ந்து வந்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின், இப்பகுதிகளைப் படையினர் கைவிட்டிருந்த போதும் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கவில்லை ஆனால் மக்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளைத் தொடர்ந்து தற்பொழுது இங்கு மீளக்குடியமர்வதற்கான அனுமதியைப் படையினர் வழங்கியுள்ளனர். (உ-4)

## கொள்ளையர் ஐவர் கைது

(கொழும்பு)

பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 5பேரை வலஸ் முல்லப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்த துப்பாக்கிகள், அவற்றுக்கான ரவைகள், கைக்குண்டுகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அண்மையில் வலஸ் முல்லைப் பகுதியில் இடம்பெற்ற பாரிய கொள்ளை ஒன்றுடன் தொடர்புபட்டாதகக் கருதப்படும் நபர் ஒருவரும் இவர்களில் அடங்குவர்.

இந்தச் சந்தேகநபர் ஏற்கனவே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட போதும், தப்பிச் சென்றவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (தி-61)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.45மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதற்கான ஆயத்தக் கிரியைகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## நட்பு நாடலும் நண்பகல் விருந்தும்

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் "நட்பு நாடலும் நண்பகல் விருந்தும்" நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப.1.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி.விசாகரூபனும் சிறப்பு விருந்தினராக உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க உப தலைவர் திருமதி சி.கிருஷ்ணாநந்தனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். வலய நிர்வாக உதவியாளர் குலேந்திரராஜா கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கணபதிப்பிள்ளை குலசிங்கம் அல்லது முத்துசாமி கனகம்மா-முதலாம் வட்டாரம் அனலைதீவு,

திருமதி துரைராஜா தெய்வானை-மணற்புலம், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

திருமதி மாசில்லாமணி மாரிமுத்து-சத்தியபுரம், உடுவில் தெற்கு, சுன்னாகம்.

திருமதி ஜெ.செபமாலை-புனித நகர் கற்கோவளம், பருத்தித்துறை.

திருமதி தார்ஸிசியஸ் லிப்னா மேரி-புனித நகர் கற்கோவளம், பருத்தித்துறை.

திருமதி ஜெ.அந்தோனியாப்பிள்ளை-புனித நகர் கற்கோவளம், பருத்தித்துறை. (உ)

## நினைவு தினம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மகிழடித்தீவு இறால் பண்ணையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் நினைவு தினம் கடந்த புதன்னறு அனுஷ்டிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி இவ் இறால் பண்ணையில் வைத்து 155அப்பாவிப் பொதுமக்களை ஸ்ரீலங்காப் படையினர் படுகொலை செய்தனர்.

இதனை நினைவு கூறும் விதமாக மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்திலேயே நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதில் மட்டககளப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கிறிஸ்ரன் மற்றும் அரசியல் துறையைச் சேர்ந்த சுதா ஆகியோர் உட்பட போராளிகள பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இப் பிரதேசம் எங்கும் உளள ஆலயங்களில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளும் இடம் பெற்றுள்ளன. (உ-4)

## கலந்துரையாடல்

(கொழும்பு)

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று இன்று 31ஆம் திகதியும் நாளை முதலாம் திகதியும் காலை 9.30மணி தொடக்கம் மாலை 4.30மணிவரை யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"சமகால அரசியல் நெருக்கடியும் சமாதானத்தின் போக்கும்" என்னும் தலைப்பில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் கண்டி, வவுனியா போன்ற இடங்களில் பிரதிநிதிகளும், யாழ்ப்பாணத்தின் பிரதான அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (தி)

## தெய்வீக இசை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேக தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை சாஹித்திய இசைப் பேரரசு, கான சிரோன்மணி சங்கீத கலாபூஷணம் ந.வி. நவரத்தினம் குழுவினரின் தெய்வீக இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ-18)

## மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தால் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தொடர்ந்து பளை, கண்டாவளை மற்றும் பூநகரி கோட்டப் பாடசாலைகளிலும் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## வீட்டுப் பாவனைக்கு பொருட்கள்

(மருதங்கேணி)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஊரியான் முரசு மோட்டை ஆகிய கிராமங்களில் மீளக் குடியமர்ந்துள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வீட்டுப் பாவனைப் பொருட்களை அண்மையில் வழங்கியுள்ளது.

மேற்படி கிராமங்களில் உள்ள 215 குடும்பங்களுக்கே தலா 6ஆயிரம் ரூபா பெறுமதியான பாய், குடம், கூரை விரிப்பு, வாளி உட்பட மற்றும் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## பவள விழாவும் பரிசளிப்புவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலத்தின் பவள விழா நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு பாடசாலைத் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.செல்லையாவும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் மேற்படி பாடசாலையின் நிறுவுநர் குடும்பத்தைச் சேர்ந்த சு.சண்முகராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொண்டு அருளாசியுரை வழங்கவுள்ளார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் பி.ப. 2.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான ஆதீன குரு நா.சர்வேஸ்வரக் குருக்கள் அருள் ஆசியுரை வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜாவும் சிறபபு விருந்தினர்களாக வலிகாம வலய கல்வி முகாமைத்துவ பிரதிகல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா, வலிகாம வலயக கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக மு.நடராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-10)

## சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள்

### கடற்றொழிலாளர் சம்மேளனம் கோரிக்கை

(திருநெல்வேலி)

இலங்கையின் சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் 3ஆம்திகதி நண்பகல் 12 மணியிலிருந்து 4ஆம் திகதி இரவு 12.00 மணிவரை கடற்றொழிலாளர் தொழிற் சங்கங்கள், மீன் சந்தைகள் என்பன இயங்க மாட்டது, என கடற்றொழிலாளர் சங்கச்சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் கடற்றொழிலாளர் சங்கக் காரியாலயங்கள், மீனவர்களின் வீடுகள் என்பவற்றில் கறுப்புக் கொடியைப் பறக்கவிடுமாறும் சம்மேளனம் கேட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்டத்திலுள்ள 105 கடற்றொழிலாளர் சங்கங்களும் 10 சமாசங்களும் பெப்ரவரி 4ந்திகதியைத் துக்க தினமாக அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்துள்ளன. (ச-43)

## உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி பதவிக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக் கல்வி) பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு இ.க. நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களும், இ.அதிபர் சேவையைச் சேர்ந்த தரம்-1, தரம்-2-1 ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிப்பவர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பதின் இரு பிரதிகளை வலயக் கல்வி அலுவலகத்தில் 15.02.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளா பொ.வேணுகோபால் அறிவித்துள்ளார். (உ)

## கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு சுவிஸ் பாராட்டு

(கொழும்பு)

நாட்டில் பல உயிர்களைப் பலி கொண்டதும், நிரந்தர அங்கவீனர்களை உருவாக்கியதுமான நிலக்கண்ணிவெடிகளை எதிர்காலத்தில் அரசாங்கமோ, விடுதலைப்புலிகளோ பயன்படுத்தக் கூடாது.

ஜெனீவா சாசனத்தை மதித்து, அதன் அடிப்படையில் இவ்விரு தரப்பினரும் செயற்படவேண்டியது மிகவும் இன்றியமையாதது என இலங்கைக்கான சுவிறஸர்லாந்துத தூதுவர் பேர்னாடினோ ரிகாசோனி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த காலங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக ஜப்பானிய அரசாங்கம் வழங்கும் நிதியுதவி தொடர்பாகக் கடந்த புதன்கிழமை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஒப்பந்தம் கைசசாத்திடும் நிகழ்வில் கருத்து வெளியிட்டபோதே சுவிற்ஸர்லாந்துத் தூதுவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் புதைக்கப்படடுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக அரசாங்கம் எடுத்து வரும முயற்சிகளைப்பாராட்டும் அதே வேளை, இனி ஒரு காலத்தில் இங்கு அரசாங்கமோ, விடு தலைப்புலிகளோ கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவது முற்றாகப் நிறுத்தப்பட வேண்டும்.

புதைக்கப்பட்டுள்ள வெடி பொருட்களை அகற்றுவதற்காக பல நாடுகளும் உதவி வழங்கி வரும் நிலையில், தற்போது ஜப்பானும் இதற்கு உதவி வருகின்றமை வரவேற்கத்தக்கது என்றார். (உ-18)

## இராணுவக் கட்டமைப்பில் அதிரடியான மாற்றங்கள்

(கொழும்பு)

பாதுகாப்பமைச்சின் விசேட ஆலோசகர் பதவியில் இருந்து முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் மகன் ரவி ஜயவர்த்தன அகற்றப்பட்ட சில நாட்களில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரணசிங்க கடந்த ஜனவரி 23ஆம் திகதி முதல் அவரின் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு மேஜர் ஜனரல் ஜெயந்த ரணவீர நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி ரணவீரவிற்கு கடந்த செவ்வாய் அன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அவர் தனது கடமைகளை எதிர்வரும் திங்கள் முதல் ஆரம்பிக்கவுள்ளார்.

இதேவேளை, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, நேற்று முன்தினம் மேஜர் ஜெனரல் திபுடு முனவை இராணுவத்தின் புதிய துணைத்தளபதியாக நியமித்துள்ளார். முதலில் இப் பதவியை வகித்த மேஜர் ஜெனரல் ஜவன் தசநாயக்க மார்ச் 31ஆம் திகதி முதல் அத்துருகிரிய புலனாய்வுப் பிரிவு முகாம் விவகாரத்துடன் தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டுக் காரணமாக ஓய்வு பெறுமாறு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## மாதாந்த ஒன்று கூடலும் நேர்முகக் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.30மணிக்கு மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின அனைத்து அங்கத்தவர்களையும் மற்றும் புதிதாக இணைத்துக் கொள்ள விரும்புபவர்களையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மனறம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, திருமறைக் கலா மன்றத்தால் நடாத்தப்பட்டு வரும் நாடகப் பயிலகத்தின் இவ் ஆண்டுக்கான புதிய பிரிவுக்கு விண்ணப்பித்த மாணவர்களுடனான நேர்முகக் கலந்துரையாடல் நாளை பி.ப.4.00 மணிக்கு மன்ற அரங்கில் இடம் பெறவுள்ளதுடன் இவர்களுக்கான ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் பி.ப.4.00மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதேவேளை, திருமறைக் கலா மன்றம் நடாத்திவரும் சிறுவா கலைக்கூட புதிய பிரிவின் ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை பி.ப.4.30மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

# மனிதர்கள் ஜாக்கிரதை

"நாய்கள் ஜாக்கிரதை" என்று ஆங்காங்கே அறிவித்தல் போட்டிருபபீரகள காலம் போகின்ற போக்கைப் பார்த்தால் " மனிதர்கள் ஜாக்கிரதை" என்று தெருவுக்குத் தெரு எழுதி மாட்டி வைக்கலாம் போலத் தெரிகிறது. ஆமாம் சார்! இவன் எப்போது வருவான்? எந்த ரூபத்தில் வருவான்? என்ன செய்வான்? என்பதை யூகிப்பதுமிகுந்த சிரமம்.

நுகர்வோர் பாதுகாப்பு என்று கூறுகின்றனரே அந்த பாதுகாப்பு யாரிடமிருந்து? மனிதனிடமிருந்து மனிதனைப் பாதுகாக்கும் முயற்சிதானே அது! புலியும், சிங்கமும் வந்தா இங்கு கலப்படம் செய்கின்றது? கரடியும் நரியும் வந்தா இங்கு பொய்முத்திரை குத்தி வியாபாரம் செய்கின்றது? எல்லாம் மனிதன் செய்யும் தவறுதான் மனிதனே அதற்குப் பலியாகின்றான்.

மிளகாய்த்தூளில் மரத்தூளைக் கலக்கிறான். அதை வாங்கி ஆகா! பேஷ் என்று சமைத்துண்கிறோம் பின்பு வயிற்றைப் பிடித்துக்கொண்டு நிற்கிறோம். வயிற்று வலி என்று மனிதன் மீதுள்ள நம்பிக்கை மனிதனுக்கு நாளுக்கு நாள் குறைந்து செல்கின்றது.

இனிவருங் காலங்களில் மனிதனின் நடவடிக்கைகளை இயந்திரங்கள் கண்காணிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகிவருகின்றது. இதற்காக ஆச்சரியப்படுவீர்கள் ஆனால் இது நடைபெறப்போவது உண்மை தான். யாருக்கும் தெரியாமல் ஒரு மனிதனுடைய நடவடிக்கைகளை கணனி மூலமாக கண்காணிக்க முடியும்

தாய்லாந்தில் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கெல்லாம் அடையாள அட்டை கொடுப்பார்களாம். அதில் அந்த நபரின் வண்ணப்படம், முகவரி அடையாளக் குறி, கைரேகை, குடும்பப் பின்னணி, குற்றப்பட்டியல் எல்லாம் இருக்கும். சிங்கப்பூரில் உள்ள 27 லட்சம் மக்களுக்கு ஏற்கனவே இது போன்ற மின்னணு அடையாளச் சீட்டு கொடுத்து விட்டார்களாம். ஒவ்வொரு மோட்டார் வண்டியிலும் மின்னணு எண்பலகையும், சிறிய கருப்புப் பெட்டியும் பொருத்தப் போகின்றனராம்.

தெருக்களில் சாலையின் மேற் பரப்பிலும் உணர்கருவிகள் பொருத்தப்படும் இதன் மூலமாக தனி நபரின் சாலை உபயோகம் எவ்வளவு என்பதை கணக்கெடுத்து அதற்கேற்ற மாதிரி வரி வசூலிக்கப் போகின்றனராம் சிறையிலிருந்து கைதிகள் விடுதலையாகும் போது அவரது உடலில் மின்னணு முறையால் அடையாளப்படுத்துவது அதன் பின் அவரது நடமாட்டத்தைக் கண்காணிப்பது இந்தப்பழக்கம் இப்போதும் அங்கு நடைமுறையில் உள்ளது.

ஒலியெழுப்பும் ஒரு கருவியைப் பொருத்திவிடுவது அதை ஒன்றும் செய்ய முடியாது. குற்றவாளி குறிப்பிட்ட எல்லையை மீறி எங்காவது சென்றால் அந்தக் கருவி சத்தம் போட்டு அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும். இன்னொரு செய்தி என்ன தெரியுமா? வலது கையில் மின்னணுச்சில் ஒன்றைப் பொருத்துவது கடையில் சென்று பொருட்கள் வாங்கிவிட்டு வலதுகையை நுண்படம் எடுக்கும் கருவி மீது காட்டினால் உங்கள் வங்கிக் கணக்கில் அந்தச் செலவு சரி செய்யப்படும்.

இன்னொரு நுண்சில் உண்டு. microchip! மிகவும் சிறிய இதை ஊசி மூலம் உடம்பினுள் செலுத்தலாம். அதன்பின் அந்த ஆள் எங்கு சென்றாலும் தெரிந்து விடும். இப்போது மிருகங்களுக்கு இதைச் செய்கின்றனராம். மனிதன் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருந்தால் அவனுக்கும் இதைப் போல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும்.

இவற்றை நினைத்துப் பார்த்தாவது மனிதன் திருந்த வேண்டும். இன்னொருவரை ஏமாற்றும் வேலையை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் வருங்காலத் தில் இப்படியெல்லாம் நடந்தே தீரும். அவ்வளவு தூரத்துக்கு ஏன்? எழுத்தில் கூட ஏமாற்ற வேலை நடக்கின்றது சார்!

ஒருவர் ஒரு புத்தகம் எழுதினார் "பணம் சம்பாதிக்க நூறு வழிகள்" என்று இப்படி ஒரு புத்தகம் எழுதிவிட்டு அவரே பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். "என்ன இது? பணம் சம்பாதிக்க நூறு வழிகள்" என்று புத்தகம் எழுதிவிட்டு... நீங்களே பிச்சை எடுக்கிறீர்களே? என்று கேட்டனர் எல்லோரும். அதற்கு அவர் "அந்த நூறு வழிகளில் இதுவும் ஒரு வழிதான்" என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேசியப் பாடசாலை அதிபர்களின் கல்வித் தகைமைகள் பரிசோதனை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளின் அதிபர்கள், நிர்வாக அதிகாரிகளின் கல்வித்தகைமைகள் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இதற்கான ஆலோசனைகளை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அமைச்சின் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

அண்மையில் கல்வி அமைச்சரின் கையெழுத்துடன் கூடிய போலிச சான்றிதழ் ஒன்று தேசியப் பாடசாலை அதிபர் நியமனத்திற்காக பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (ச)

## இலங்கை வர்த்தக சம்மேளனம்

# ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த காலக்கெடு விதிக்க முடிவு

(கொழும்பு)

பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையே இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கும் சமாதானப் பேச்சுக்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்குமான காலக்கெடு ஒன்றை விதிக்க இலங்கை வர்த்தக சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை கூட்டான ஒரே தடவையில் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன், நேரம் ஒதுக்கித் தருமாறு இவ் அமைப்பு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இக்கால வரையறை இன்றுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் இச் சந்திப்புக்கு இதுவரை நாள் குறிக்கப்படவில்லை.

இதையடுத்தே, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடத்தே பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதையும் பேச்சுவார்த்தை மற்றும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் காலக்கெடு ஒன்றை விதிப்பதற்கு இச்சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானத்திற்கு நாட்டிலுள்ள சமூக மற்றும் சமய அமைப்புக்களை ஒன்று திரட்டி ஆதரவு திரட்டும் முயற்சியிலும் மேற்படி சம்மேளனம் ஈடுபட்டு வருகிறது. (உ-4)

## வடக்கு கிழக்கு மாகாணத்தில்

# தகுதிவாய்ந்த ஆசிரியர் தட்டுப்பாடே கல்வி அபிவிருத்திக்குத் தடையாகவுள்ளது

## யுனிசெப்பின் இலங்கைப் பிரதிநிதி தெரிவிப்பு

(மருதங்கேணி)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்கு தடையாக இருப்பது தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் பற்றாக்குறையாகும்.

5 ஆயிரத்து 800 தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதுடன் 200 சிங்கள ஆசிரியர்கள் இம் மாகாணத்தில் தேவைப்படுகிறனர்.

யுனிசெப் இலங்கைப் பிரதிநிதி ரெட்சைபான், மாகாணக்கல்வி அமைச்சு முகாமைத்துவ மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கல்வியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

2003ஆம் ஆண்டில், யுனிசெப் நிறுவனம் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் நீர்வழங்கல் நடவடிக்கைக்காகவும் குழந்தை பாதுகாப்புக்காகவும் 9 மில்லியன் டொலர் செலவில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

சமாதானப் பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி, விடுதலைப்புலிகள், அரசாங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஐ.நா.அமைப்புக்களான அரசசார்பற்ற நிறுவனங்கள் தயாரித்த கூட்டு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு யுனிசெப் அனுசரணை வழங்கியுள்ளது.

கல்வித்துறையில் பாரபட்சமான நடவடிக்கைகள் முரண்பாடு உருவாகுவதற்கு காரணமாக அமைந்தன. தரமான கல்வியை வழங்குவதன் மூலமும் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்குவதன் மூலமும் முரண்பாடற்ற சூழலை உருவாக்கும் என்றார். (உ-35)

## இராசிபலன்

31. 01. 2004
(தை 17, சனிக்கிழமை)

| | |
|---|---|
| தசமி | முழுவதும் |
| கார்த்திகை | பிற்பகல் 04.31மணிவரை |
| இராகுகாலம் | 09.36-11.06 மணிவரை |
| சுபநேரம் | 03.36-05.06 மணிவரை |

**மேடம்**
கடுமையான வார்த்தை, கற்பனை மிகுதி, நிலை மாற்றம், பண வீரயம்.

**இடபம்**
நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, விருந்து பசாரம், தெளிந்த சிந்தை.

**மிதுனம்**
கற்பனை மிகுதி, பிரயாணம், திடீர் நன்மை, தொழில் கஷ்டம்.

**கடகம்**
காரிய அனுகூலம், புத்திசாதுரியம், தொழில் வருமானம் அதிகரிக்கும், பெருமையடைதல்.

**சிங்கம்**
நல்ல சம்பவம், பிறர் உதவி, பாராட்டு, முயற்சி கைகூடும்.

**கன்னி**
பிதா சிந்தை, இடமாற்றம், சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு.

**துலாம்**
குடும்பக் கவலை, காரிய தாமதம், வாகன பயம், உடல் வியாதி.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை, தொழில் விருத்தி.

**தனுசு**
உற்சாகம், செய்தொழில் விருத்தி, ஆரோக்கியம், பிறர் உதவி.

**மகரம்**
வியாபார நன்மை, சிறு வியாதி, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

**கும்பம்**
செல்வாக்கு, நல்ல முயற்சி, பிரயாணம், பொருள் சேர்க்கை.

**மீனம்**
பிரயாண நன்மை, புதிய முயற்சி, நண்பர்கள் உதவி, இனிய சம்பவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## மத்திய வங்கியின் மேற்பார்வையில்

# யூலை மாதம் முதல் பிரமுக வங்கி இயங்கும்

(கொழும்பு)

மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ், எதிர் வரும் யூலை மாதம் 22ஆம் திகதி முதல் பிரமுக வங்கி இயங்குவதற்கான அனுமதியை மத்திய வங்கி வழங்கியுள்ளது.

பிரமுக வங்கி யூலை மாதம் முதல் ஆரம்பமானாலும், முதல் 6 மாதங்களுக்கு மத்திய வங்கி வழங்கிய கடன்களையும், முற்பணங்களையும் அறவிட முயலக் கூடாது என்றும், கடந்த காலத்தில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி ஈட்டிய வருமானத்திற்கு சமமான தொகையை வங்கி ஈட்டிய பின்பே கடன்களை மீள அறவிடுவதற்கு அனுமதிக்கப்படும் என்றும், நிதி சேகரிக்கும் எந்தவிதமான நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

(வ)

# கட்டணம் செலுத்தும் நடைமுறை ஒப்பந்தம்

(கொழும்பு)

தொலைத் தொடர்பு சேவையில் அழைக்கும் தரப்பினர் மட்டும் கட்டணம் செலுத்தும் நடைமுறைக்கான ஒப்பந்தம் ஒன்றில் தொலைபேசி இணைப்பு வழங்குநர்கள் பெப்ரவரி முதல் வாரத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

இந்த உடன்படிக்கையில், நான்கு செலுலர் இணைப்பு வழங்குநர்கள், இரண்டு கம்பி இல்லாத் தொலைபேசி இணைப்பு வழங்குநர்கள் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் ஆகியவையே கைச்சாத்திடவுள்ளன. இவ்வுடன்படிக்கையில் இலங்கையின் தொலைத் தொடர்பு ஒழுக்காற்று ஆணைக்குழுவும் ஒரு தரப்பாகச் செயற்படவுள்ளது.

கையடக்கத் தொலைபேசி வைத்திருப்போர் உள்வரும் இணைப்புகளுக்கும், கட்டணம் செலுத்தி வருகிறார்கள். எனினும் இதற்கு சில மாற்று வழிகளை தன்னியக்கத் தொலைபேசி இயக்குநர்கள் வழங்கிவருவதால் அழைப்பு வீதக் கட்டணத்தை சில பயனாளிகள் செலுத்தவேண்டிய தேவை ஏற்படுவதில்லை.

இதற்குப் பதிலாக குறிப்பிட்ட தொகையை மட்டும் செலுத்த வேண்டி ஏற்படும் என்று தெரிவித்துள்ள தொலை தொடர்புத் திணைக்கள வட்டாரங்கள், இந்த நடைமுறை இரண்டு வருடங்களுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், தொலைபேசிகளின் பத்து இலக்க நடைமுறை காரணமாக இதனை அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளன. (வ)

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்- குறள்

வலம்புரி

## உண்மையை வெளிப்படுத்தும் சோமவன்சவின் உரை

இலங்கை அரசியல் குப்பை மேடாகிப் போய் விட்டது. குப்பை மேட்டில் காகம், நாய், நரி இன்னும் பல உயிரினங்கள் எவ்வாறு கூடி நின்று குழப்பம் செய்கின்றனவோ அதே நிலைமை இலங்கையின் சம கால அரசியலில் ஏற்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கை அரசியலில் என்று அறிமுகப்படுத்தப்பட்டதோ அன்றே ஜனநாயகத்தின் அரும்புகள் கருகிவிட்டன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தான் நினைத்தபடி எதுவும் செய்யலாமென்ற நிலைமை இருப்பதால் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லாமற் போயிற்று. பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்ற ஜனாதிபதி அடுத்தபடியாக ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தார். விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசு நடத்தும் சமாதானப் பேச்சுக்களை எதிர்த்து வந்த ஜே.வி.பி. இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு தனது பேரினவாத சிந்தனைக்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது.

இதில் வேடிக்கை என்னவெனில் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டின் இறைமையை-பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே பாதுகாப்பு அமைச்சைத்தான் பொறுப்பேற்றதாகத் தெரிவித்திருந்தார். தனது கருத்துக்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையும், ஆதாரங்காட்டினார்.

ஆனால், இப்போதுதான் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை ஏன் பொறுப்பேற்றுக் கொண்டார் என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்வதாயின் ஜே.வி.பியின் தலைவரான சோமவன்ச வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வரவேண்டுமென ஜே.வி.பி. நிபந்தனை போட்டது. ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச இலங்கைக்கு வருவதாக இருந்தால் அதற்குப் பாதுகாப்பு அமைச்சோ அல்லது உள்துறை அமைச்சோ ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கீழ் இருக்கக் கூடாது ஏனெனில், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச இலங்கையில் கைது செய்யப்பட வேண்டிய ஒரு குற்றவாளி.

ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் பாதுகாப்பு அமைச்சு இருந்தால் அவரின் இலங்கை வருகை எவ்வகையிலும் சாத்தியப்பட மாட்டாது. இதனாலேயே பாதுகாப்பு, உள்துறை ஆகிய அமைச்சுக்களைப் பறித்தெடுக்குமாறு ஜனாதிபதிக்கு ஜே.வி.பி அழுத்தம் கொடுத்தது.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர வேண்டுமென்பதற்காக ஜே.வி.பியின் அழுத்தத்திற்கு இசைவடைந்த ஜனாதிபதி, மூன்று முக்கிய அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நாட்டைப் பாதுகாப்பதற்காகவே அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறிய ஜனாதிபதி, ஒரு குற்றவாளி தப்பித்துக்கொள்ள அனுமதி வழங்கியதன் மூலம் அவரின் நோக்கம் வெளிப்பட்டுள்ளது.

ஏற்கனவே தீட்டிய திட்டத்திற்கமைய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச இலங்கைக்கு வருகை தந்தார். ஜே.வி.பி-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டு முன்னணிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அந்தக் கூட்டத்தில் பேசிய சோமவன்ச ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீழ்த்தவே இரு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்ததாகக் கூறினார். இவ்வாறு அவர் கூறியதற்குள் இருக்கக் கூடிய உட்பொருள் உற்று நோக்கப்பட வேண்டும். ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீழ்த்த வேண்டிய நோக்கம் ஏன் ஏற்பட்டதெனில், அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதான பேச்சை முன்னெடுத்திருப்பதேயாகும்.

ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செய்து கொண்ட கூட்டு உடன்படிக்கையில், விடுதலைப் புலிகளுடன் பேசுவது பற்றிக் குறிப்பிடப்பட்ட போதிலும் , புலிகளுடன் பேசிய அரசை விழுத்தும் நோக்கம் இருக்கும் போது, ஒப்பந்தம் மட்டும் நடைமுறைப் படுத்தப்படுமா என்ற கேள்வி எழவே செய்கின்றது.

இக் கேள்விகளின் மத்தியில் சோமவன்சவின் உரை சமாதானம் தொடர்பான மக்களின் எதிர்கால நம்பிக்கைகளை சிதறடிப்பதாக உள்ளது.

# விடுதலைப்புலிகளைக் கண்காணிக்க கொழும்பில் விசேட புலனாய்வுக்குழு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக விசேட புலனாய்வுக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இக்குழுவில் புலனாய்வுப் பணியில் மிகுந்த அனுபவம் உள்ள முப்படை வீரர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைக்கப்படவுள்ளனர்.

இலங்கை புலனாய்வுத்துறையினருடன் மேலதிக துறையாகவே இத்துறை இணைக்கப்படவுள்ளது.

இதற்குரிய சகல ஏற்பாடுகளிலும் பாதுகாப்பு அமைச்சு முனைப்புடன் ஈடுபட்டு வருவதுடன் இதற்கு ஸ்ரீலங்கா தேசிய புலனாய்வுப் பணியகத்தினரும் ஆதரவு வழங்கவுள்ளனர்.

விடுதலைப்புலிகள் கொழும்பில் ஊடுருவி பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதாக வெளியாகிவரும் தகவல்களைத் தொடர்ந்தே இக்குழு அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நூற்றுக்கணக்கான கரும்புலிகள் தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவி இருப்பதாக அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(உ-6)

## வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்தும் அரசியல்வாதி அகப்பட்டார்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 269இளைஞர்களை இத்தாலிக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் நபர் ஒருவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கைதுசெய்துள்ளது.

இந்தச் சந்தேகநபர் சிலாபம் பிரதேச பிராந்திய அரசியல்வாதி எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் சிலாபம் கடற்பகுதியில் வைத்து குற்றப் புலாய்வுத் திணைக்களப் பொலிஸார் சட்டவிரோதமானமுறையில் இத்தாலி செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் 269 இளைஞர்களைக் கைதுசெய்து விசாரணை நடத்திய போதே சம்பந்தப்பட்ட நபர் இனங்காணப்பட்டுள்ளார்.

(உ-10)

## மாகாண சபைகள் கலைப்பு பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் கருத்தொருமிப்பு

(கொழும்பு)

வடமேல் மாகாண சபைகளுக்கான பதவிக்காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதியுடன் முடிவடைந்ததன் பின்னர் சகல மாகாணசபைகளையும் விருப்பின் பேரில் கலைப்பதற்கு ஐக்கியதேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் உடன்பாடு கண்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு நாளிலேயே சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை நடாத்துவதற்கு வசதிகயாகவே இருதரப்பினரும் இவ்வாறு உடன்பாடு கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் எதிர்வரும் ஏப்ரல் கடைசி வாரத்தில் மாகாணசபை தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

காலம் முடிவுற்றவுடன் வடமேல் மாகாணசபைகள் தாமாகவே கலைக்கப்பட்டுவிடும். ஆனால் ஏனைய மாகாண சபை முதலமைச்சர்கள் அதற்கு முன்னரேயே மாகாண சபைகளை கலைக்குமாறு ஆளுநர்களுக்கு கூறியுள்ளனர்.

இதேவேளை, ஒரு சனிக்கிழமை சகல தேர்தல்களையும் நடாத்தும் சட்டமூலம் பெப்ரவரி 3இல் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இது ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையில் உடன்பாடு காணப்பட்ட பின்னர் அவசர சட்டமூலமாக விவாதிக்கப்பட்டு ஒரே நாளிலேயே நிறைவேற்றப்படவிருக்கிறது.

ஜனாதிபதி நவம்பர் 4இல் அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் இரு தரப்பினருமே மாகாணசபை தேர்தலை ஒரு பரீட்சார்த்தமான தேர்தலாகக் கருதுகின்றனர் என அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் [illegible]ணசபை தேர்தல்களுக்காக இரு கட்சிகளும் தற்போதி[illegible]ருந்தே தம்மைத் தயார்ப்படுத்த ஆரம்பித்துள்ளன. இதன் முதற்கட்டமாக ஜனாதிபதியும் பிரதமரும் வெளிவட்டாரங்களில் பிரச்சினைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும், தேர்தல்கள் திருத்தப் பிரேணைகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் கொள்கைகளை இரு அரசியல் கட்சிகளும் சிபார்சு செய்தாலும் இவை மாகாணசபை தேர்தல்களில் பிரயோகிக்கப்படமாட்டாது. மாகாணசபை தேர்தல்கள் ஏற்கனவே போன்று வழமையான முறையிலேயே நடைபெறவுள்ளன.

(உ-6)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மற்றவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது.

மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பதும் கூடச் சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குப் படிப்படியாகத் தருகிறது.

சுவாமி சிவானந்தர்

## தேவாலயங்கள் அனைத்தும் தாக்கப்படுவதற்கு வாய்ப்பு

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

இதுவரை பெறப்பட்ட தகவல்களின்படி தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு குழுவினரே திட்டமிட்டு செய்து வருகின்றனர் என பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இறுதியாக கூட மத்தேகொட எனும் இடத்தில் தேவாலயம் சேதமாக்கப்பட்டதால் ஏறத்தாழ 1 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று மீகொட, ஹோ மாகம இடங்களிலுள்ள தேவாலயங்களைத் தாக்கியோர் கைது செய்யப்பட்டிருந்தும் பௌத்த குருமாரின் வேண்டுகோளுக் கிணங்க விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

பெரும்பாலும் சகல தேவாலயங்களுமே தாக்குதல் நடாத்தப்படக்கூடிய அச்சம் நிலவுகின்றது.

இதனால் அவற்றிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இந்திராடிசில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-6)

## இ.தொ.ஐ.மு.-ஜனாதிபதி பலமணிநேரம் கூடி ஆராய்வு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணிக்கும் இடையில் நேற்று முன்தினம் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

பலமணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, ஜே.வி.பிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டமைப்பின் நோக்கம் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உப தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்நாட்டின் அரசியல் யாப்புக்கு ஏற்ப மலையக மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய கடப்பாடு எங்களுக்குண்டு.

இதனால் தான் நாங்கள் இந்தக் கூட்டணியை ஆதரிக்கிறோம். அத்துடன் மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் இக் கூட்டணி செயற்படவேண்டும் எனவும் நாங்கள் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டுள்ளோம். அதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றார்.

(தி-61)

## தமிழீழ மாணவர் அமைப்பினால் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்

(மருதங்கேணி)

பின் தங்கிய நிலமையிலுள்ள மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டும் எனும் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் கருத்துக்கமைவாக தமிழீழ மாணவர் அமைப்பு 23 பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமித்துள்ளது.

வன்னியின் பெரும்பாலான பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் அரசால் நியமிக்கப்படாத பட்சத்தில் அப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நிலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

இம் மாணவர்களின் கல்வியில் வீழ்ச்சி ஏற்படக் கூடாது என்ற நோக்கில் ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிகம் நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு தமிழீழ தேசியத் தலைவர் பணித்தமைக்கு அமைவாக, தமிழீழ மாணவர் அமைப்பால் கடந்த வருடம் 23 பாடசாலைகளுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்க கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ-35)

## அடிக்கல் நாட்டல்

(கந்தர்மடம்)

பளைப் பிரதேசத்தில் நீர்த்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபை அலுவலகம், ஆயுர்வேத மருத்துவமனை மற்றும் நூலகம் ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

## தமிழ்மக்களுக்கான...

இச் சந்திப்பில் நோர்வேத் தரப்பில் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன் பீற்றர்சன், வெளியுறவுத்துறை பிரதி அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு நடைமுறைக்கு வந்து 21 மாதங்களைக் கடந்தபோதும் இலங்கை அரச படையினர் தமிழர் தாயகப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள், கோயில்கள் மற்றும் பொது இடங்களை விட்டு இன்னமும் வெளியேறவில்லை.

இதனால் சமாதானத்தின் பலாபலன்களை தமிழ் மக்களால் அனுபவிக்க முடியாதுள்ளது. அரசு வாக்குறுதியளித்தபடி தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்காதுள்ளது.

முக்கியமாக யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் பெருமளவு மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று கூறிய சு.ப.தமிழ்ச்செல்வன் யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்களுக்கு உடனடி நிவாரண உதவி, மனிதாபிமான அடிப்படையில் நேரடியாகச் செய்து தருவது தொடர்பாக நோர்வே கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

(ம)

## கூட்டணி...

மீதான விசாரணையில் கட்சியின் செயலாளர் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு விதித்திருந்து. இத்தடையுத்தரவு அமுலில் உள்ள இந்நேரத்தில் ஆனந்தசங்கரி தலைமையில் மத்திய குழு கூடவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(த)

## யாழ்...

22ஆம் திகதியுடன் முடிவுற்ற நிலையிலும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத பட்சத்தில் இந்தத் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பான முடிபு எடுக்கப்படவுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்த ஆரம்ப நிலையில் கடமை புரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போராட்ட ஆரம்ப தினத்தன்று காலை 8.00மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் அனைவரையும் இராமநாதன் மண்டப முன்றலுக்குச் சமுகம் தருமாறு சங்கத் தலைவர் சி.தங்கராசா கேட்டுள்ளார்.

(உ-19)

## இலங்கையின்...

அரச அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கோ எம்மைப் பற்றித் துளியும் அக்கறையில்லை.

நாம் நாளாந்தம் படும் துன்ப துயரங்களை அவர்கள் அறியவும் வாய்ப்பில்லை.

இந்த நிலைமையில் எமக்கு சுதந்திரதினக் கொண்டாட்டம் அவசியமா? உண்மையில் எம்மைப் பொறுத்தவரையில் பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திரதினமல்ல. அதனை நாம் கரிநாளாக அனுஷ்டிப்பதே பொருத்தமானது.

எமக்காகக் குரல் கொடுக்க எவருமேயில்லை என்ற நிலையில் எமது நிலைப்பாட்டைச் சர்வதேசத்துக்கு விளக்கும் வகையில் 4ஆம் திகதியன்று வலிவடக்குப் பிரதேச செயலகம் முன்பாக உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ள நாம் எமக்கொரு விடிவு கிட்டும்வரை எமது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரவும் முன்வந்துள்ளோம்.

இது தவிர எமது குரல் பாராளுமன்றத்திலும் ஒலித்து நாம் படும் இன்னல்களை உலகத்து மாந்தர் எல்லோரும் அறியச் செய்யும் வகையில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாடும் மக்களின் சார்பாகப் போட்டியிடவும் தீர்மானித்துளீளோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை சுதந்திர தினத்தன்று யாழ்.குடாநாட்டிலுள்ள 63 நலன்புரி நிலையங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு தமது அதிருப்தியை வெளியிட இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

இது இவ்விதமாக இருக்க தென்மராட்சியின் மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீளக் குடியமர அனுமதி மறுக்கப்பட்ட 600 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் தமது அவல நிலையை வெளிப்படுத்தும் வகையில் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளமையும், இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-16,37)

## விமானப்படை...

தளபதி ஹேரத் பிரபல இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தொடர்பான வழக்கில் குற்றவாளியென உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டவர். இதன் பின்னர் இவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-6)

## ஸ்ரீலங்கா...

சரவணமுத்து, தயான் ஜெயதிலக, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(த-6)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைக... கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் ...
காரைநகர்
T.P : 0602212...
(கி-7341)

## இணுவில் மத்திய கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் மத்திய கல்லூரியி... மேற்பிரிவுக்கான வருடாந்த இல்... மெய்வல்லுநர் போட்டி இ... பகல் 2 மணிக்கு கல்லூரி ... தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் துரை... தலைமையில் நடைபெற... இந்நிகழ்வில் வலிகாமம் வ... கல்வி அலுவலகக் கணக்கா... ந.யோகேந்திரராஜா பிரதமவிருந்தினராகவும் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச)

## தீவக ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் கல்வி கற்பிக்கும் சேவை முன் பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நடை... பெறும் என தீவக வலயக் கல்வி... பணிப்பாளர் வி.ராதாகிருஷ்... அறிவித்துள்ளார்.

கண்ணீர் அஞ்சலி

எமது கொத்தணியின் நெறியாளர் குழு உறுப்பினரும் பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான

திரு.அ.அமலோற்பவநாயகம் அவர்களின் அன்புத் தந்தை

சூசை அந்தோனி

அவர்கள் 29.01.2004ல் காலமான செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி,
பிப்பிலிச் சந்தி, மானிப்பாய்

(கி-7335)




சங்குநாதம்

வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி,
பிப்பிலிச் சந்தி, மானிப்பாய்

(சி-7335)

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

## நுகர்ச்சியாளர்களை அங்கத்தவர்களாகச் சேர்த்தல்

☞ ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/= மட்டுமே

**நன்மைகள்:**

❖ யு-என்-டி-பி- அனுசரணையுடன் சுய முயற்சிக் கடனாக ரூபா 25,000/= பெற்றுத் தரப்படும்.
❖ சங்கத்தின் கிராமிய வங்கியில் சேமிப்புச் செய்வதன் மூலம் சேமிப்புப் பணத்திற்கு வட்டி வழங்கப்படுவதுடன் சேமிப்புத் தொகைக்கேற்ப நுகர்ச்சிப் பொருட்கள் கடனாக வழங்கப்படும்.
❖ 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் அங்கத்தவராகச் சேரலாம்.
❖ 100 ரூபா பங்கு உள்ளவர்களுக்கு மட்டான வட்டி வழங்கப்படும்.

சங்கத்தில் இணைந்து பயன் பெறுங்கள்

"கூட்டுறவே நாட்டுயர்வு"

பணிப்பாளர்களும்
பணியாளர்களும்

(சி-7334)

## சங்குநாதம்




சூடு பிடிக்கும் இந்திய தேர்தல் களம்

மீண்டும் போரைத் தொடங்க இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்

சினிமாச் சிதறல்

கே.வி.குணசேகரம் எழுதும்
கல்தூண்கள்
(தொடர் கதை)

வியாசரின் பதில்கள்
ஆலடி மாநாடு

மற்றும் பல அம்சங்களுடன்
வாசிக்கத் தவறாதீர்கள்
வெள்ளி வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா 16.00

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட